# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.62/2022** **நாள் : 26.10.2022**

**சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் வானகரம் சந்திப்பில் 1900 மி.மீ மற்றும் 300 மி.மீ விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாயினை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 28.10.2022 அன்று காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை பகுதி–7, 8, 9, 10, 11, 12 மற்றும் பகுதி–13 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் வானகரம் சந்திப்பில் 1900 மி.மீ மற்றும் 300 மி.மீ விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாயினை இணைக்கும் பணிகள் 28.10.2022 அன்று காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மேற்கொள்ளப்படவுள்ளதால் அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்துர் மற்றும் அடையாறு ஆகிய பகுதிகளுக்கு குழாயின் மூலமாக வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

ஆகையால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| பகுதிப் பொறியாளர் - 7<br>(அம்பத்துர் ) | கைபேசி எண்.8144930907 |
| பகுதிப் பொறியாளர் - 8<br>(அண்ணா நகர்) | கைபேசி எண்.8144930908 |
| பகுதிப் பொறியாளர் - 9<br>(தேனாம்பேட்டை) | கைபேசி எண்.8144930909 |
| பகுதிப் பொறியாளர் - 10<br>(கோடம்பாக்கம்) | கைபேசி எண்.8144930910 |
| பகுதிப் பொறியாளர் - 11<br>(வளசரவாக்கம்) | கைபேசி எண்.8144930911 |
| பகுதிப் பொறியாளர் - 12<br>(ஆலந்துர்) | கைபேசி எண்.8144930912 |
| பகுதிப் பொறியாளர் - 13<br>(அடையாறு) | கைபேசி எண்.8144930913 |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்